CNR-Tamil

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
-----
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.I, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Case Number | : | **CC** 184/2016 |
| Prosecution Witness | : | அ.சா. 5 |
| Name | : | நேரு |
| Father's/Husband Name: | : | கந்தசாமி |
| Address : | : | கிளை மேலாளர், இந்தியன் வங்கி, தஞ்சாவூர் |
| Age | : | 51/2023 |

தேதி: 11/12/2023

**முதல் விசாரணை :** சாட்சிக்கு நீதிமன்ற ஒளிநகல் பதிவாளர் திருமதி. அர்ச்சனா சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது( **எதிரிகள் ஆஜர்** )

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் தற்போது தஞ்சாவூரில் உள்ள இந்தியன் வங்கியில் கிளை மேலாளராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்பு நான் திருவாரூர் மாவட்டத்தில் நீடாமங்களம் கிளையில் கிளை மேலாளராக பணியாற்றினேன்.கலைமணி என்பவர் எங்களது கிளையில் சேமிப்பு கணக்கு வைத்திருந்தார். அந்த கணக்க எண். 888079741. இந்த வங்கி கணக்கு பட்டியலை பெரம்பலூர் மாவட்ட குற்ற பிரிவினர் கேட்டு வேண்டுகோள் கடிதம் கொடுத்தனர். அதனால் நான் 01.09.2014 முதல் 26.11.2015 வரையிலான வங்கி கணக்கு பட்டியலை நான் வழங்கினேன். என்னிடம் காண்பிக்கப்படும் இந்த வங்கி கணக்கு பட்டியல்

என்னால் வழங்கப்பட்டது தான். அது **அ.சா.ஆ.3**. 13.09.2014 அன்று ரூ.5,000/- இந்த வங்கி கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது. இது சம்மந்தமாக காவல் துறையினர் என்னை விசாரணை செய்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரிக்கு போதிய வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் விசாரணை இல்லை என முடித்துக்கொள்ளப்பட்டது.

Taken down by / before me in open court
read over/interpreted to the witness
in the presence of the accused/accused/
pleader and admitted by the witness to
be correct.

*sd/-*

Judicial Magistrate No.I,
Perambalur.